தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-1-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பழங்குடியின விவசாயிகளுக்கு நூற்புழு பயிற்சி

அகில இந்திய ஒருங்கிணைந்த நூற்புழு ஆய்வு திட்டத்தின் கீழ் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக நூற்புழுவியல் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், தாளவாடி, தலமலை ஊராட்சி ராமர் அணை பழங்குடியின விவசாயிகளுக்க நூற்புழு தாக்குதலை கண்டறிதல் மற்றும் நூற்புழு மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி முகாமிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூற்புழுவியல் துறை பேராசிரியை முனைவர் அனிதா அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட வனசரக அலுவலர் திரு. பழனிசாமி அவர்கள் முன்னிலை வகித்தார்.

பயிர்களில் நூற்புழுக்கள் எவ்வாறு தாக்கி அழிக்கிறது, நூற்புழு தாக்குதலால் பயிர்களில் ஏற்படும் அறிகுறிகள் மற்றும் பயிர்களை பாதிக்கும் நூற்புழுக்களை உயிரியல் நூற்புழுக் கொல்லிகளைக் கொண்டு கட்டுப்படுத்துவது குறித்து நூற்புழு பேராசிரியர்கள் முனைவர் ஜோதி, முனைவர் கலையரசன் மற்றும் முனைவர் சொர்ணகுமாரி ஆகியோர் விளக்கினர்.

மேலும் பயிற்சியில் பங்கு பெற்ற பழங்குடியின விவசாயிகள் அனைவருக்கும் நூற்புழு மேலான்மைக்கான இடுபொருட்கள் வழங்கப்பட்டது.

மக்கள் தொடர்பு அலுவலர்